மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.எல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்

2024 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 5 ம் நாள் வெள்ளிக்கிழமை

இடை மனு எண்.2/2023

அசல் வழக்கு எண்.22/2023

1. கண்ணம்மாள்
2. பாலமுருகன்
3. கவிதாமணி ...மனுதாரர்கள் / வாதிகள்

//எதிர்//

1. கந்தசாமி
2. கோவிந்தசாமி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 20.02.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.R.சண்முகம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரகாஷ், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் அயிட்டம் - 1 சொத்தில் உள்ள பொதுக்கிணற்றிலிருந்து மனுதாரரின் பிற சொத்துக்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வழித்தடத்தில் பதிக்கப்பட்டுள்ள குழாய்களை பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் மற்றும் தாவா சொத்து அயிட்டம் - 1 சொத்திற்கு, அயிட்டம் - 2 சொத்து வழியாக வாதிகளின் கால்நடை, வண்டி வாகனாதிகள் கொண்டு செல்ல, வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ இடையூறு ஏற்படுத்தக்கூடாது என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்களால் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1). தாவா சொத்தில் அயிட்டம் 1 ஆக குறிப்பிடப்பட்ட சொத்தானது மனுதாரர்களது தந்தையார் மணிக்கு பாகப்பிரிவினை பத்திரம் 3389/1989 மற்றும் செட்டில்மெண்ட் பத்திர எண்.3390/1989 படி பாத்தியப்பட்டு அவரது இறப்பிற்கு பின்னர் சட்ட வாரிசுகள் ஆன மனுதாரர்களுக்கும், அவர்களது தாயாருக்கும் பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வரும் சொத்தாகும். எதிர்மனுதாரர்கள் லேண்ட் ப்ரோமோட்டர் தொழில் செய்து வருகிறார்கள்.

1.2). எதிர்மனுதாரர்கள் தாவாச் சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தையும் தென்புறம் உள்ள சொத்தையும் மனுதாரர்களது உறவினர்களிடமிருந்து கிரயம் பெற்று அனுபவித்து வந்தார்கள். எதிர்மனுதாரர்கள் அவர்களின் லேண்ட் ப்ரோமோட் தொழிலுக்கு மனுதாரர்கள் சொத்தின் ஒரு பகுதி சொத்தையும் சேர்த்துப் பெற்றால் மனையிடப்பிரிப்பு அங்கீகாரம் எளிதாக கிடைக்கும் என மனுதாரர்களிடம் கூறினார்கள். மனுதாரர்களும் எதிர்மனுதாரர்களுக்கு பாகப்பிரிவினை பத்திரம் எழுதி அதில் A ஷெட்யூல் சொத்து மனுதாரர்களுக்கும் B ஷெட்யூல் சொத்து எதிர்மனுதாரர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. மேற்படி மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து தாவாச் சொத்தில் அயிட்டம் - 1 ஆகும்.

1.3). எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்கிய சொத்தை மனையிடப்பிரிவுப்பு செய்யவேண்டி எதிர்மனுதாரர்கள் உரிய அலுவலகத்தை அணுகிய போது தாவாச் சொத்தின் அயிட்டம் - 2 சொத்தையும் தங்கள் பெயரில் கிரயம் செய்து கொடுத்தால் தங்களது மனையிடப்பிரிப்பு அங்கீகாரம் உறுதியாகப் பெற முடியும் என மீண்டும் மனுதாரர்களிடம் எதிர்மனுதாரர்கள் கோரினார்கள். அதன் பேரில் மனுதாரர்களும் தாவா சொத்து அயிட்டம் - 2 ஆகக் குறிப்பிடப்பட்ட சொத்தினை கிரையம் செய்து தொடுத்தார்கள். ஆனால் மேற்படி தாவாச் சொத்து அயிட்டம் - 2 சொத்தினை கிரயம் செய்து தருவதால் மனுதாரர்களது போக்குவரத்துக்கும் கிணற்று நீர் பயன்பாட்டுக்கும் எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்த மாட்டோம் என எதிர்மனுதாரர்கள் உறுதி

கூறி ஒரு வழிநடைத் தடபாத்திய ஒப்பந்தம் கடந்த 06.03.2013 தேதியில் ஏற்படுத்தப்பட்டு அதில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் முன்னிலையில் கடந்த 14.03.2013 தேதியில் கையொப்பம் செய்து அது தற்போதும் நடைமுறையில் இருந்து வருகிறது. மேற்படி தாவாச் சொத்து அயிட்டம் - 2 சொத்தைக் குறித்த கிரயப்பத்திரத்தில் எதிர்மனுதாரர்களுக்கு 244.72 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள இடம் மட்டுமே கிரயம் செய்து கொடுக்கப்பட்டது அதற்குண்டான தடபாத்தியமோ வேறு எந்தவிதமான உரிமைகளும் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் மேற்படி சொத்தில் தான் மனுதாரர்களின் பிற சொத்துக்களுக்கு சென்று கொண்டிருக்கும் தண்ணீர்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. அதோடு அந்த குழாய்களோடு தொடர்புடைய கிணறு பொதுக்கிணறு ஆகும். மேற்படி வழிபாத்திய ஒப்பந்தப்படியான சொத்து அயிட்டம் - 2 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.4). மனுதாரர்கள் தாவாச் சொத்தில் அயிட்டம் - 1 சொத்துக்கு சென்று வரவும் தாவாச்சொத்து அயிட்டம் 1 ல் உள்ள பொதுக்கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துப் புழங்கிக் கொண்டும் வருகிறார்கள். பொதுக்கிணற்றிலிருந்து குழாய் போட்டு தான் மனுதாரர்களின் பிற சொத்துக்களுக்கு தண்ணீர் கொண்டு செல்கிறார்கள். எதிர்மனுதாரர்கள் தாவாச் சொத்தின் வடபுற மற்றும் தென்புறப்பகுதி சொத்தை மனுதாரர்களிடமிருந்தும், மனுதாரர்களின் உறவினர்களிடமிருந்தும் ஏற்கனவே கிரயம் பெற்றுவிட்டார்கள். தாவா அயிட்ட – 2 சொத்தின் கிழபுறம் மற்றும் மேல்புறச் சொத்துக்கள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது. தாவாச் சொத்து அயிட்டம் - 1 ல் பொதுக்கிணறு உள்ளது. அதிலிருந்து தான் மனுதாரர்கள் கிழபுற மற்றும் மேல்புறச் சொத்துக்களுக்கு தண்ணீர் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்கிறார்கள். அதோடு மேற்படி தாவாச் சொத்து அயிட்டம் வழியாகத்தான் மனுதாரர்களுக்கு உள்ளாட்சியின் குடிநீர் குழாய் பதிக்கப்படும்.

1.5). எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களிடமிருந்து அயிட்டம் - 2 சொத்தைக் கிரயம் பெறும் போது மேற்படி அயிட்ட – 2 சொத்தை

மனுதாரர்கள் வழித்தடமாக பயன்படுத்திக் கொள்வதை எக்காரணம் கொண்டும் தடுக்க மாட்டோம் எனத் தெரிவித்துதான் 14.03.2013 தேதியில் மனப்பூர்வமாக மனுதாரர்களும் எதிர்மனுதாரர்களும் எழுதி வைத்துக் கொண்டார்கள். ஆனால் எதிர்மனுதாரர்கள் தற்போது அந்த ஒப்பந்தத்தை வேண்டுமென்றே மீற முயற்சி செய்வதோடு மனுதாரர்களுக்கு இடையூறு ஏற்படுத்த முயல்கின்றனர்.

1.6). கடந்த செப்டம்பர் மாதம் 2022 கடைசி வாரத்தில் தாவாச் சொத்தின் அயிட்டம் 2 ல் உள்ள சொத்தை தடுப்பு போட்டு அடைக்க முயற்சித்தும், கடந்த 01.10.2022 தேதியில் மனுதாரர்கள் பிற சொத்துக்கு தாவாச் சொத்து அயிட்டம் - 1 லிருந்து அதாவது பொதுக்கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் குழாயில் ஏற்பட்ட பழுதை நீக்குவதற்காக தாவாச் சொத்து அயிட்டம் - 2 ல் உள்ள வழித்தடத்தில் வேலை செய்த போது எதிர்மனுதாரர்கள் இடையூறு ஏற்படுத்தினார்கள். அதனை மனுதாதர்கள் தடுத்துவிட்டார்கள்.

1.7). தாவா சொத்து அயிட்டம் - 1 மனுதாரர்களின் இருப்பிடத்திற்கு செல்லவும் மனுதாரர்களின் பிற சொத்துக்களுக்கு மேற்படி அயிட்டம் – 1 சொத்தில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லவும் மேற்படி தாவாச் சொத்தின் அயிட்டம் - 2 சொத்தின் வழியைத் தவிர வேறு வழியில்லை. மனுதாரர்கள் சொத்துக்கு செல்லும் வழியையும் மனுதார்களுக்கு பாத்தியமுள்ள பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் பாத்திய உரிமையையும் தடுக்கவும் எதிர்மனுதாரர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த வழக்கில் வசதியின் சமநிலை மனுதாரர்கள் பக்கமே இருக்கிறது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>2). எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையை எதிர்மனுவாக தாக்கல் செய்ததன் சுருக்கம்:</u>

2.1). வாதி பிரதிவாதிக்கு 244.72 சதுரடி உள்ள சொத்தை விற்பனை செய்தார் என்பது உண்மை. அதைப்போல் பிரதிவாதியின் வீட்டு மனைப்பிரிவுகளுக்கு அனுமதி பெறுவதற்காக தாவா 2 அயிட்ட சொத்தை

கிரையம் வாங்கியதாக சொல்வது தவறு. வாதிகள் தாவா 2 வது அயிட்ட சொத்தை அவர்களது 1 வது அயிட்ட சொத்திற்கு சென்று வர தடமாகவும், தாவா 2 வது அயிட்ட சொத்தில் குடிநீர் இணைத்து பைப் லைன்கள் உள்ளதாகவும் சொல்வது தவறு. மேலும் கடந்த 06.03.2013 வாதி பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்டதாக சொல்லும் ஒப்பந்தப் பத்திரம் பொய்யானது. அதில் கடந்த 14.03.2013 ல் அமலுக்கு வந்ததாக சொல்லுவதும் பொய்யானது.

2.2). உண்மையில் வாதிகள் தான் தாவா 2 வது அயிட்ட சொத்தை பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ய முன்வந்தார்கள். வாதி பிரதிவாதிகளுக்குள் தாவா 2 வது அயிட்ட சொத்தின் மூலம் மற்ற சொத்துக்களுக்கு சென்று வர கடந்த 06.03.2023 ல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. பிரதிவாதிகளுக்கு தாவா 2 வது அயிட்ட சொத்தின் தென்புறமும் வடபுறமும் சொத்து உள்ளது. ஏற்கனவே வடபுறம் உள்ள சொத்தை பிரதிவாதி வீட்டு மனைகளாக பிரித்துவிட்டார். அதைப்போல் தென்புறம் உள்ள புலஎன்.497/6A5 மற்றும் 497/6B ஆகிய புலங்களையும் மனைகளாக பிரிக்க முடிவு செய்தார். மேற்படி சொத்து தாவா 2 வது அயிட்ட சொத்து மற்றும் புல எண்.497/6A4A1 க்கு அருகில் உள்ளது. எனவே இந்த பிரதிவாதிகள் வாதிகளிடம் மேற்படி மனைபிரிவுகளில் உள்ள ரோடுகளை அவர்களின் கிணர் பகுதிக்கு சென்றுகொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே கடந்த 06.03.2013 தேதியிட்ட ஒப்பந்தம் செயல்படுத்தப்படவில்லை. அது 07.03.2013 ல் ரத்து செய்யப்பட்டு தாவா 2 வது அயிட்ட சொத்தைப் பொருத்து 07.03.2013 வாதிகள் பிரதிவாதிகளுக்கு ஒரு கிரையப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். மேற்படி 06.03.2013 ல் தடபாத்தியம் ஏற்படுத்தி இருந்தால் அவர்களது உரிமையை அவர்கள் 07.03.2013 கிரையப்பத்திரத்தை தக்க வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதைப்போல் புல எண்.497/6A5 மற்றும் 497/6B ஆகிய மனைப்பிரிவுகளில் உள்ள தடங்கள் தாவா 1 வது அயிட்ட சொத்தை அடையும் விதமாக உள்ளது. எனவே 06.03.2013 தேதியிட்ட

ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. ஏற்கனவே சொன்னபடி பிரதிவாதிகள் மனைபிரிவுகளில் உள்ள ரோட்டை கடந்த 10.01.2023 அன்று சூலூர் டவுன் பஞ்சாயத்திற்கு தானசெட்டில்மென்ட் எழுதிக் கொடுத்துள்ளார்கள். வாதிகள் எந்த காலத்திலும் தாவா 2 வது அயிட்ட சொத்தின் வழியாக தண்ணீர் எடுத்துச் செல்லவில்லை. தாவா 2 வது அயிட்டம் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தான் அதற்கு உண்மையான உரிமையாளர்கள்.

2.3). இம்மனுதாரர்கள் சொல்லியுள்ளது போல் வழக்கு சொத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை. வழக்கெழு மூலம் தவறானது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>3). தீர்வுக்குரியப் பிரச்சனை:</u>

கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>4). பிரச்சனைக்குத் தீர்வு:</u>

4.1). இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு புலஎண்.497/6A4 ல் உள்ள கிணற்றிடம், வாரி, வாய்க்கால் ஆகியவை உள்ளடக்கிய 1 வது அயிட்ட சொத்தும், தாவா 2 வது அயிட்ட சொத்தும் பாத்தியப்பட்டது என்றும் பிரதிவாதிகளின் சொத்து தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு வடபுறமும் தென்புறமும் உள்ளது என்றும், வாதிகள் தங்களது 1 வது அயிட்ட சொத்தில் உள்ள கிணற்றிற்கு சென்றுவர தாவா 2 வது அயிட்ட சொத்தை பயன்படுத்தி வந்தார்கள் என்றும், பிரதிவாதிகள் அவர்களது சொத்துக்களை மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்ய முயற்சி செய்த பொழுது, தாவா 2 வது அயிட்ட சொத்தில இருவரும் ஒப்புக்கொண்டு ஒரு பதிவு செய்யப்படாத தடபாத்தியம் கடந்த 06.03.2013 ல் ஏற்படுத்திக் கொண்டனர் என்றும், அதன் கீழ் வாதிகளுக்கு தாவா 2 வது அயிட்ட சொத்தின் மூலம் வழக்கு சொத்தில் நடந்து கொள்ளவும் தண்ணீர் எடுத்துச் செல்லவும் உரிமை உள்ளது எனவும், எதிர்மனுதாரர்கள் அதைத் தடுத்ததால் இந்த வழக்கும், இடைக்கால

தடையுறுத்துக் கட்டளைக் கோரி மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.2). பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு 2 வது அயிட்ட சொத்திற்கு கிழபுறமும் மேல்புறமும் வாதிகள் சொத்து உள்ளது எனவும், வழக்கு 2 வது அயிட்ட சொத்திற்கு வடபுறமும், தென்புறமும் பிரதிவாதிகள் சொத்து உள்ளது என்றும், பிரதிவாதிகள் அவர்களது சொத்துக்களை மனையிடங்களாகப் பிரித்து விற்பனை செய்துள்ளார்கள் என்றும், மேற்படி 2 வது அயிட்ட சொத்து பிரதிவாதிகளுக்கு தேவைப்பட்டதால் கடந்த 07.03.2013 ல் 2 வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றும், அவ்வாறு வாதிகள் தங்களுக்கு 06.03.2013 தேதியிட்ட ஆவணத்திற்கு தடபாத்தியம் இருந்திருந்தால் அவர்கள் 07.03.2013 ஆவணத்தில் அந்த உரிமையை தக்க வைத்துக் கொண்டிருப்பார்கள் என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்து பிரதிவாதிகளினுடைய முழுமையான உரிமை மற்றும் அனுபவத்தில் உள்ள சொத்து என்றும் வாதிகளுக்கு பிரதிவாதிகளின் லேயவுட் மனைபிரிவுகளுக்குள் உள்ள தடத்தின் வழியாக அவர்களது 1 வது அயிட்ட சொத்தை அடைந்துகொள்ள பாதை உள்ளது என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.3). இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் சூலூர் கிராமம் புல எண்.497/6A4 ல் 41 சென்ட் பூமி வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், புல எண்.497/6A4 ல் சுமார் 244 சதுரமீட்டர் பூமியை 1 வது அயிட்ட சொத்திற்கு சென்று வர தடமாக வாதிகள் பயன்படுத்தி வந்தார்கள் என்றும், அதற்காக வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்குள் கடந்த 06.03.2013 ல் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும், அந்த ஒப்பந்தம் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்களுக்கு தாவா 2 வது அயிட்ட சொத்தைப் பொருத்து கடந்த 07.03.2013 ல் பிரதிவாதிகள் கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றும், அந்த ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் தான் 2 வது அயிட்ட சொத்துக்கு உரிமையாளர்கள் என்றும் கடந்த 07.03.2013 தேதியிட்ட மனுதாரர்கள்

எதிர்மனுதாரர்களுக்கு இடையே தாவா 2 வது அயிட்ட சொத்தைப் பொருத்து ஏற்படுத்தப்பட்ட கிரையப் பத்திரம் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி வழக்கு 2 வது அயிட்ட சொத்து வாதிகள் குறிப்பிடுவது போல் ம.சா.ஆ.3 ந் கீழ் தடமாக உபயோகப்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் சொத்தா என்பது பதிவு செய்யப்படாத ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் தற்பொழுது தீர்மானிக்க முடியாது. ஏனெனில், அந்த ஆவணத்திற்கு அடுத்த தேதியில் தாவா 2 வது அயிட்ட சொத்தைப் பொருத்து பிரதிவாதிகளுக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். எனவே பிரிவு 92 இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் உள்ள சரத்துகளுக்கு எதிராக பதிவு செய்யப்படாத ஆவணம் முன்னிலைப்படுத்தப்பட்டால் அதைப் பொருத்து முழுமையான சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டுதான் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியும். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :</u>

இல்லை

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 07.03.2013 | கிரையஆவணம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 07.03.2013 | பாகசாசனப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 06.03.2013 | பதிவு செய்யப்படாத வழிப்பாத்திய |

| | | |
|---|---|---|
| | | ஒப்பந்தப்பத்திரம் அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்: -</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 10.04.2023 | தான செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 20.04.2023 | பட்டா எண்.1707 சூலூர் கிராமம் இணையவழி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 20.02.2024 | புல எண்.497 க்கான புலவரைபடம் இணையவழி நகல் |

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

இடைநிலை மனு எண்.2/2023

அசல் வழக்கு எண்.22/2023

வரைவு/செவ்வை உத்தரவு

நாள்: 05.04.2024